Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 9 செவ்வாய்க்கிழமை 25-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 33



## சிவில் உடையில் வந்த 2 பொலீஸார் நேற்று நல்லூரில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், நவ. 25

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் வைத்து சிவில் உடையில் இருந்த இரு பொலீஸார் இனந்தெரியாதோரால் நேற்று மாலை ஐந்து மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நல்லூர் தெற்கு வீதியில் புதிதாகத் திறக்கப்பட்ட நல்லூர் ஆலய தெற்கு வாசலுக்குச் சற்றுத் தொலைவில் — தபால் பெட்டிக்கு அருகில் — மேற்படி இருவரின் சடலங்களும் கிடக்கக் காணப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து படையினர் அவ்விடத்துக்கு விரைந்தனர். சடலங்கள் இரண்டும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. அவை யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் நேற்றிரவு வைக்கப்பட்டிருந்தன.

சுஹைர் என்ற முஸ்லிம் பொலீஸார் ஒருவரும், ஜெயதிலக என்ற சிங்களப் பொலீஸார் ஒருவருமே உயிரிழந்தனர்.

ஒருவரின் நெஞ்சிலும் மற்றையவரின் தலையிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து நல்லூர்ப் பகுதியில் நேற்று மாலை சிறிதுநேரம் பதற்றம் நிலவியது. ஆலயப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-ஐ-51)

## மட்டு. படையினர் உஷார் நிலையில்!

மட்டக்களப்பு, நவ. 25

விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு பாதுகாப்பு படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நகர் உட்பட பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்கள் இடம் பெற்றுள்ளதை உறுதிப்படுத்துவதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் அடிக்கடி சுற்றிவளைப்புகள், சோதனைகள் இடம்பெறுகின்றன. பொது மக்கள் நடமாட்டமும் கடந்த சில நாள்களாகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இராணுவச் சீருடைகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காகவும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் கிழக்கு-மேற்கு இடையே போக்குவரத்து முற்றாக தடைப்படும்?

## கடும்மழை வெள்ளம் காரணமாக இரணைமடுப் பாதை மூடப்படும்

வவுனியா, நவம்பர் 25

வன்னிப் பெருநிலப்பரப்பில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தில் - கிழக்கில் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து கண்டி வீதிக்கு மேற்கேயுள்ள பகுதிகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து அடுத்து வரும் நாள்களில் முற்றாகத் தடைப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான போக்குவரத்துக்கு தற்போதுள்ள ஒரே ஒரு வழியான இரணைமடுப்பாதை வெள்ளம் காரணமாக இன்று அல்லது நாளை மூடப்படுவதை அடுத்தே இந்நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

முப்பத்தினான்கு அடி உயரம் வரை நீர் மட்டத்தைத் தேக்கக்கூடியது இரணைமடுக்குளம். ஆனால் கடந்த பல வருடங்களாக இக்குளமும் அதன் அணைக் கட்டுகளும் சரிவர பராமரிக்கப்படாததால் அந்தளவுக்குக் குளத்தில் நீர்மட்டம் உயர விடுவது அணை உடைக்க வழிசெய்யும் என அஞ்சப்படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா முடித' சரக்குக் கப்பலில் பயணிகள் சேவை நடத்த ஏற்பாடு

### யாழ். அரச அதிபருக்கு நேற்று 'பக்ஸ்' செய்தி

யாழ்ப்பாணம், நவ. 25

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் ''லங்கா முடித'' என்ற சரக்குக் கப்பலில் பயணிகள் சேவையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ். அரச அதிபருக்கு நேற்று ''பக்ஸ்'' செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

தற்சமயம் காங்கேசன் துறையில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இக்கப்பலில் பொருள்கள் இறக்கி முடிந்ததும் 700 பயணிகளை அதில் ஏற்றி திருகோணமலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள அகதிகளுக்கு யாழ். திரும்ப முன்னுரிமை அளிக்கப்படும் என்றும்—

ஏனைய பயணிகள் பணம் செலுத்தி பயணம் செய்யலாம் என்றும்—மேலும்தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருத்த வேலை முடிந்து "தேவரதம்" திரும்பியது

### விரைவில் தீவுப்பகுதியில் சேவை

யாழ்ப்பாணம், நவ. 25

திருத்த வேலைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட ''தேவரதம்'' [illegible] படகு காங்கேசன் துறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கொழும்பு துறைமுகத்தில் திருத்த வேலைகள் செய்யப்பட்ட இந்தப்படகு 'லங்கா [illegible] கேசன் துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஜீப் கண்ணியில் சிக்கியது!

### இரு படையினர் பலி!!

வவுனியா, நவ. 25

நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி சங்கரத்தை வயல் பகுதியில் தாம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் படையினரின் ஜீப் ஒன்று சிக்கிச் சேதமடைந்ததாகவும்—

அதிலிருந்த இரு படையினர் உயிரிழந்ததாகவும்—

'புலிகளின் குரல்' வானொலி நேற்று அறிவித்தது.

படையினர் இருவர் உயிரிழந்ததை உறுதிப்படுத்திய பாதுகாப்பு வட்டாரங்கள் ஜீப் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவித்தன.

(உ-3-5-164)

## மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் இன்று காலை ஆரம்பம்

### வன்னியில் புலிகள் ஏற்பாடு

விடுதலைப் புலிகளின் மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் இன்று காலை 8-00 மணிக்கு கொடியேற்றலுடன் ஆரம்பமாகும் என்று 'புலிகளின் குரல் வானொலி' அறிவித்தது.

மாவீரர் எழுச்சிநிகழ்வுகள் பல்வேறு இடங்களிலும் நடைபெறுவதாகவும் அந்த வானொலி குறிப்பிட்டது.

விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் அதன் தலைவர் பிரபாகரனுக்கும்ஆசிவேண்டி முத்தையன் கட்டு இடதுகரை பாலமுருகன் ஆலயத்தில் கடந்த 21 ஆம் திகதி முதல் சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருவதாகவும்—

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமைவரை விசேட பூசைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் — மேலும் அறிவிக்கப்பட்டது.

(ஐ-உ-164)

## கடந்த இரு நாள்களாக வவுனியாவில் தேடுதல்!

வவுனியா, நவ. 25

வவுனியா நகரப் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் வைரவபுளியங்குளம் மற்றும் ரயில் நிலையப் பகுதிகளில் தேடுதல் இடம்பெற்றது. தப்பி ஓடிய படையினர் சிலரைத் தேடி படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

வவுனியா நகரில் தோணிக்கல், குட்ஷெப்பட் வீதி, மணிக்கூட்டு வீதி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெற்றன. கிரனேட் ஒன்றுகண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் வாந்திபேதி பரவுகின்றது 8 பேர் மரணம்! 258 பேர் பாதிப்பு!

கொழும்பு, நவ. 25 நாட்டின் பல பாகங்களிலும் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட 258 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார, சுதேசிய மருத்துவத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நோய் தொற்றிய பிரதேசங்களைச் சேர்ந்த 820 பேரின் கழிவுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

புத்தளத்தில் 193 பேரும், குருநாகலில் 48 பேரும், கம்பஹாவில் 15 பேரும், காலி, பதுளை ஆகிய மாவட்டங்களில் 2 பேரும் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய்க்கு இதுவரை எட்டுப்பேர் பலியாகியுள்ளனர். சிலாபத்தில் மாத்திரம் மூன்று பேர் உயிரிழந்தனர். சிகிரியாவில் இரண்டு பேரும் ரிதிகம, மாறவெல, பொல்காவெல ஆகிய பிரதேசங்களில் மூன்று பேரும் இந்த நோய் காரணமாக உயிரிழந்தனர்.

இந்தியாவுக்குச் சென்று திரும்பிய நான்கு பேர் இந்த நோயை நாட்டிற்குள் காவி வந்துள்ளனரென்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை —

சுகாதாரம் தொடர்பான நடைமுறைகளை உதாசீனம் செய்யும் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் உடனடியாக மூடப்படும் என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. (ஐ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு இராசம்மா

[முன்னாள் பெண்கள் கேணிப்பாதுகாவலர், கீரிமலை]

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும், தற்போது உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராசம்மா அவர்கள் 24—11—1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான க. வைரமுத்து, க. சின்னத்துரையின் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (சிங்கப்பூர்), ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (பிரான்ஸ்), பாரதிதாசன் (உரிமையாளர், நித்தியானந்த பவான் கடை, கீரிமலை) ஆகியோரின் தாயாரும், சர்வேஸ்வரி (கொழும்பு), துரைராசா (புகையிரத பாதுகாவலர், கொழும்பு), மகேந்திரன் (பிரான்ஸ்), கௌரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பகல் (25-11-97) 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பராய் இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. பாரதிதாசன் (மகன்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (51386)

### மார்க்கண்டு இராசேந்திரம் (பத்தர்)

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, தல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு இராசேந்திரம் 24-11-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், உதயகுமார் (உதயன் ஜேர்மனி) அன்புத் தந்தையும், ரூபியின் (ஜேர்மனி) பாசமிகு மாமனாரும், திணேஷ்சரின் (ஜேர்மனி) அன்புப் பேரனும், சீனிவாசகம் (நகையகம், யாழ்.) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25-11-97 காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S சீனிவாசகம்
(மருமகன்)

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (51382)

### விஸ்வரட்ணம் ஹரிதேவ்

(கட்டட பட வரைஞர் — கொழும்பு)

சாரையடி புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வரட்ணம் ஹரிதேவ் 18-11-97 இல் நீர்கொழும்பில் காலமானார்.

இவர் விஸ்வரட்ணம் — மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், நடராசா — பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தரங்கனி, தனுஷ்காந், தர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
விஸ்வகுமார் (குணம்)
(சகோதரன்)

(51392) (ஊழியர், அஜந்தாஸ் புடைவையகம்)

### ஆழ்வார் கனகலிங்கம் சிறிகாந்தன்

(சிறி)

பலாலி வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆழ்வார் கனகலிங்கம் சிறிகாந்தன் (சிறி) நேற்று (24-11-97) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மனோகரன், செல்வம், சந்திரன் (டோகா), மோகன், சீலன், றோசா, அப்பன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகலிங்கம் - தங்கம்மா தம்பதிகளினதும், நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளினதும் பெறாமகனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (25-11-97) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சண்முகம் யோகநாதன்
(ஈஸ்வரி வான் உரிமையாளர் - 27/5757)
ஜெயலதா,
விமலநாதன்.

(51391)

## மரம்நடும் விழா

தென்மராட்சி, நவ. 25 சாவகச்சேரி கச்சாய் வீதி நாவலடிப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் மரம் நடும் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இவ் வைபவத்தில் டாக்டர் வ. சின்னப்பு, வித்தகம் குருபரமசாமி, சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு. செ. சரவணபவ, சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராசா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க. சந்திரசேகரர் உட்பட பலர் கலந்து கொள்வர். (ஐ-117)

## யாழ்ப்பாணத்து சுவாமிகளின் குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 25 பாரதி போற்றிய யாழ்ப்பாணத்து சுவாமிகளின் 55 ஆவது குருபூசைத் தினம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அல்வாய் வடக்கு வியாபாரி மூலை அருள்மிகு வீரபத்திரேசன் ஆலயத்தில் அமைந்துள்ள அவரது சமாதிக் கோயிலில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமசுவாமி சித்ரூபானந்தா அருளுரை வழங்குவார். (ஐ-ரீ)


# D. M. I.

233, STANLY ROAD,
JAFFNA.

# A/L 2000

## கலை, வர்த்தக வகுப்புக்கள்

''ஆரம்பமாக இன்னும் 46 நாள்கள் உண்டு.''

NOTE:-
O/L பரீட்சையை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சாதகமாக அமைய ...

(சி/2174)


## செய்தியாளரை விடுவித்து நீதிமன்றம் தீர்ப்பு!

கொழும்பு, நவ. 25 டென்மார்க்கிலிருந்து நாடு கடத்தப்பட்ட கோப்பாய் யுவதி சித்திரா ராஜேந்திரன் சம்பந்தமான செய்தி ஒலிபரப்புத் தொடர்பாக பொலீஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட செய்தியாளர் சந்தூன் ஜெயசேகரா நேற்று நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட மேற்படி யுவதி நாடுகடத்தப்பட்டார்.

தெகிவளையில் உறவினர் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டு பொலீஸாரால் அவசரகாலச் சட்ட விதிகளின் பிரகாரம் தடுத்துவைக்கப்பட்டுப் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

டென்மார்க்கில் இருந்து இவருடன் விமானத்தில் வருகை தந்த பத்திரிகையாளர்கள் இருவரின் நடமாட்டமும் இரகசியப் பொலீஸால் அவதானிக்கப்பட்டது. பின்னர் அந்த இருவரும் நாடு கடத்தப்பட்டனர்.

டென்மார்க் அரசியலில் இவ் விவகாரம் சூடுபிடித்திருந்தது.

நாடு கடத்தப்பட்ட மேற்படி பத்திரிகையாளர்களிடம் கைப்பற்றப்பட்ட சில ஆவணங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கடிதத் தலைப்பில் சந்தூன் ஜெயசேகராவினால் வழங்கப்பட்ட கடிதமொன்றும் இருந்தது.

இதனைத் தொடர்ந்து சந்தூன் ஜெயசேகரா பதவி இடைநிறுத்தப்பட்டார். அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் இருந்தே நேற்று கொழும்புப் பிரதம நீதிபதி முனிதாச நாணயக்காரவினால் அவர் விடுவிக்கப்பட்டார். (உ-21)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சை

அச்சுவேலி, நவ. 25 அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் பற்சிகிச்சைப் பிரிவு மீண்டும் செயற்படுகின்றது.

வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் பற்சிகிச்சைப் பிரிவு செயற்பட்டுவருகின்றது.

மந்திகை வைத்தியசாலையின் பல் வைத்திய நிபுணர் செவ்வாய்க்கிழமைகள் தோறும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் பற்சிகிச்சை அளித்து வருகிறார். (ஐ-11)


## மாபெரும் கண்காட்சி

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்றும் நடைபெறும்.

இடம்: யா/இணுவில் இந்துக்கல்லூரி
காலம்: 25-11-1997 காலை 8 மணி - 5 மணி

**தையற் பொருள்கள்**
**சமஸ்கிருதவரலாற்றுஓவியங்கள்**

ஆகியவை காட்சிக்கு வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அதிபர்

இணுவில் இந்துக்கல்லூரி,
இணுவில். (51393)



## மலைவேம்பு மரக்குற்றிகளினதும், விறகுக்கான மரங்களினதும் ஏல விற்பனை

யாழ். செயலக வளவினுள் தறிக்கப்பட்ட மலைவேம்பு மரக் குற்றிகளும், விறகும் 05 — 12 — 97 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளன. இவற்றை ஏலத்தின் மூலம் ஆகக் கூடிய விலையினைக் கேட்டுப் பெற்றுகொள்பவர்கள் அன்றைய தினமே செயலகத்தில் முழுப் பணத்தினையும் செலுத்தி மரத்தினை அப்புறப்படுத்தவேண்டும். மரங்களை 4 — 12 — 97 காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரை செயலக நலன்புரிக்கிளையுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

க. சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/2176)


## கண்ணீர் அஞ்சலி

சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி

**திரு. ஆ. வ. கணேசலிங்கம்** அவர்களின்

மாமனார்

**இளையதம்பி குமாரசாமி (ஜே. பி.)**

அவர்கள் 22-11-97இல் அமரத்துவம் அடைந்த செய்தி எமக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

அன்னார் ஆசிரியராயும், பல அமைப்புக்களின் தலைவராயும் இருந்து அரும்பணியாற்றியவர். அமரரின் உறவினரின் ஆறாத்துயரில் பங்கு பற்றுவதோடு, அமரரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானைக் கோட்டக் கல்வி
அலுவலக உத்தியோகத்தர்களும்,
முதன்மையாசிரியர்களும்.

[51387]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட காங். முடிவு

## தி.மு.கவை வெளியேற்றுமாறு அரசுக்கு நெருக்குதல்

புதுடில்லி, நவ. 25

தி. மு. க. அமைச்சர்கள் அரசில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அலுவல்களுக்கு முட்டுக்கட்டை போடப்போவதாக காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நேற்றுக் காலை புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் நாடாளுமன்ற செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலுக்கு தாம் எழுதியுள்ள கடிதத்துக்கு இதுவரை எவ்வித பதிலும் வரவில்லை என்று கட்சித் தலைவர் சீதாராம் கேசரி தெரிவித்தார்.

அதேசமயம் ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வரும் ஆதரவை மாலைக்குள் (திங்கள்) காங்கிரஸ் விலக்கிக் கொள்ளும் அல்லது இன்று மக்களவையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வரப்படலாம் என்று மூத்த காங்கிரஸ் தலைவர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் தி.மு.க.வுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்புகள் குறித்து குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டதும்—

ராஜீவ் காந்தி கொலையின் பின்னால் உள்ள சதிகள் குறித்து ஆராய நீதிபதி ஜெயின் தலைமையில் இந்த கமிஷன் நியமிக்கப்பட்டதும் தெரிந்தவையே. (இ-3)

## நாடாளுமன்றின் அவைகளில் காங்கிரஸ் உறுப்பினர் கூச்சல்!

### சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்றுக் காலையில் கூடியவுடனேயே ஒத்திவைக்கப்பட்டன.

தி. மு. க. அமைச்சர்களை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என வலியுறுத்தி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூச்சல் போட்டு குழப்பத்தை உருவாக்கியதால் மக்கள் அவை ஒத்திப்போடப்பட்டது.

மக்கள் அவை கூடியதும், சபை நடவடிக்கைகளை காண வந்த ரஷ்ய எம்.பிக்கள் குழுவை சபாநாயகர் பி. ஏ. சங்மா வரவேற்றார்.

அது முடிந்ததும் காங்கிரஸ் தலைவர் சரத்பவார் எழுந்து, இந்த அரசு சட்ட பூர்வமானது அல்ல, எனவே சபையில் அலுவல் நடத்தும் உரிமையை அரசு இழந்துவிட்டது என்று கூறினார்.

காங்கிரஸ் கோரியபடி கேள்வி நேரத்தை ஒத்திவைக்க சம்மதித்த சபாநாயகர் எதுபற்றிப்பேச வேண்டும் என்று கேட்டார்.

இதற்கு தி மு. க உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

காங்கிரஸ் உறுப்பினர்களும், தி.மு.க. உறுப்பினர்களும் சபைக்குள் இடைவழியில் நின்றபடி மாறிமாறி கூச்சலிட்டனர். (இ-3)

## உலக அரங்கில்

## கர்நாடக சங்கீதத்துக்கு உதவும் கணனி!

கர்நாடக சங்கீதம் பயிலும் மாணவர்களுக்கு உதவ கணனி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் உள்ள சங்கீத ஆராய்ச்சி அக்கடமியின் விஞ்ஞானிகள் இதனை வடிவமைத்துள்ளனர்.

சுருதி பேதத்துடன் பாடினால் இந் கணனி காட்டிக் கொடுத்து விடும், சுருதிச் சுத்தம்,துல்லியம் ஆகியவற்றை மேம்படுத்த இந்த கணனி உதவும்.

இசைப் போட்டிகளில் சரியான குரல்வளம் உள்ளவரைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் பணிக்கும் இந்த கணனியினால் உதவ முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பாப்பரசரின் கியூபா வருகை

ஹவானா, நவ. 25

பாப்பரசரின் வருகை தொடர்பான ஏற்பாடுகள் கியூபாவில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் தமது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயத்தை கம்யூனிஸ்ட் நாடான கியூபாவுக்கு மேற்கொள்கிறார்.

பாப்பரசரின் வருகையை முன்னிட்டு மதகுருமார்கள் உட்பட 57 பேருக்கு கியூபா வருவதற்கு கியூபா அரசாங்கம் வீஸா வழங்கி உள்ளது.

கியூபா அதிகாரிகளுடன் இணைந்து இவர்கள் பாப்பரசர் வருகைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள்.

ஜுலை 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை பாப்பரசர் கியூபாவில் விஜயம் மேற்கொள்வார்.

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ 1996 நவம்பரில் வத்திக்கான் சென்று பாப்பரசரைச் சந்தித்தார்.

அப்பொழுது காஸ்ரோ விடுத்த அழைப்பை பெற்றே பாப்பரசர் கியூபா வருகிறார். (இ)

## தேசிய அரசு அமைக்க கட்சிகளுக்கு அழைப்பு

### இந்திய சபாநாயகர் விடுக்கிறார்

ஜெய்ப்பூர், நவ. 25

தற்போதைய அரசியல் நெருக்கடியைச் சமாளித்து நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தேசிய அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் பி. ஏ. சங்மா யோசனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் தேர்தலை எதிர்கொள்ள எந்த ஒரு கட்சியும் தயாராக இல்லாததால் தேசிய அரசு ஒன்றை அமைப்பதே நெருக்கடியைத் தீர்க்க சாதகமான ஒரே வழி என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையைக் கருதி தேசிய அரசு ஒன்றை அமைக்க சகல அரசியல்கட்சிகளும் முன்வரவேண்டும்.

தேசிய அரசு ஒன்றை நாடு விரும்பி ஏற்கும் பட்சத்தில் அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேர்தல்களைப் பற்றிச் சிந்திக்கவே கூடாது.

தற்போதைய அரசியல் குழப்பத்தில் புதிய தேர்தல் என்பது நாடாளுமன்றத்தில் எந்த ஒரு கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ அறுதிப் பெரும்பான்மை இல்லாத முடங்கிய நிலையையே தோற்றுவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இடைத்தேர்தலே ஒருவழி என்கிறார் அத்வானி

புதுடில்லி, நவ. 25

''தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு இடைக்காலத் தேர்தல்தான் ஒரேவழி''

இப்படி பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

இருப்பினும் மத்தியில் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் தங்கள் கட்சி ஈடுபடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## இரத்த அழுத்த நோய்க்கு தோடம்பழம்

புதுடில்லி, நவ. 25

தினமும் ஒரு தோடம்பழம் சாப்பிட்டால் இரத்த அழுத்த நோய் ஏற்படாது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தோடம்பழத்தில் பொட்டாசியம் நிறைய இருப்பதால் அது இரத்த அழுத்தத்தை குணப்படுத்துகிறது.

இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு பொட்டாசியக் குறைவு ஒரு முக்கிய காரணம் என்று இருதய நோய் நிபுணர் ஒருவர் மும்பாயில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார். (இ-3)

## பொம்மை வடிவில் கிடந்த கண்ணிக்கு குழந்தைகள் பலி!

### பாக். - ஆப்கான் எல்லையில் சம்பவம்

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய பகுதியில் குழந்தைகளின் பொம்மை வடிவில் கிடந்த கண்ணி ஒன்று வெடித்ததில் 5 குழந்தைகள் இறந்தன.

இறந்த குழந்தைகள் அனைவரும் 10 வயதுக்கு உட்பட்டவர்கள்.

பிளாஸ்டிக் பொம்மை போல் காணப்பட்ட இந்த கண்ணியை குழந்தைகள் எடுத்துப்பார்த்துக் கொண்டிருந்தபோது அது வெடித்தது.

நீண்டகாலத்துக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் படையெடுத்தபோது வண்ணத்துப் பூச்சி போன்ற வடிவத்தில் கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் நூற்றுக்கணக்கான குண்டுகள் விமானத்தில் இருந்து போடப்பட்டன.

இதனைப் போன்றதே இந்த பொம்மைக்குண்டும் என்று நம்பப்படுகிறது. (இ-3)

## தேர்தல் நடந்தால் காங்கிரஸுக்கே நஷ்டம்

### முதல்வர் கருணாநிதி கூறுகிறார்

தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் தவிர்க்க முடியாத ஒன்று ஆனால் தற்போது தேர்தல் நடத்தப்பட்டால் அதன் மூலம் மிகவும் பாதிக்கப் போவது காங்கிரஸ் கட்சியே.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழக முதல்வர் மு. கருணாநிதி.

பாரதீய ஜனதாக்கட்சியுடன் தி. மு. க. எந்தவித உடன்பாடும் செய்து கொள்ளாது ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் அது மத்தியில் அரசு ஒன்றை அமைக்குமானால் அதற்கு நாங்கள் பொறுப்பு அல்லது ஐக்கியமுன்னணியில் இருந்து தி. மு. க. விலகும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (ஐ)

## நீதிபதி ஜெயின் ஆஸ்பத்திரியில்

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி இடைக்கால அறிக்கையைத் தயாரித்த ஓய்வுபெற்ற நீதியரசர் ஜெயின் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிலையத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

ஏற்கனவே அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவரது உடல் நிலை தேறிவருவதாக மருத்துவ நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## சூட்டுக் கொலை

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் முன்னாள் மாநில அமைச்சரான கே. பொன் ஜொக்சிங் என்பவர் திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத ஆயுதபாணிகளால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது மெய்ப்பாதுகாவலர்களும் கொல்லப்பட்டுள்ளனர். (இ-5)

## தேசிய அரசு அமைப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு

நாட்டில் தேசிய அரசு அமைப்பது என்பது செயற்படக்கூடிய தீர்வாக அமையாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய அரசு அமைக்கப்படவேண்டும்என மக்களவை சபாநாயகர் பி. ஏ. சங்மா தெரிவித்துள்ள யோசனை குறித்து கருத்து தெரிவித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி. ராஜா பாரதிய ஜனதா மற்றும் இடதுசாரிக் கட்சிகள் போன்ற பல்வேறு சித்தாந்தங்களைக் கொண்ட கட்சிகளை வைத்துக் கொண்டு தேசிய அரசு அமைப்பது சாத்தியமாகாது என்று தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணியைத் தோற்றுவித்த உறுப்புக் கட்சியான தி. மு. கவை முன்னணியில் இருந்து ஒருபோதும் வெளியேற்ற முடியாது என்றும் அவர் கூறினார். [இ-3]

## ஈராக்கில் கடந்த மாதம் 7 ஆயிரம் பேர் மரணம்!

### பொருளாதாரத் தடை காரணம்

பாக்தாத், நவ. 25

ஈராக் மீது ஐ. நா. விதித்துள்ள பொருளாதாரத் தடையினால் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக சென்றமாதம் குழந்தைகள் உட்பட 7 ஆயிரம் பேர் இறந்துள்ளனர் என்று ஈராக்கிய சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எண்ணெய்க்குப் பதிலாக உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஈராக் 'ஓடர்' கொடுத்திருந்த மருந்துப் பொருள்களில் 40 சதவீதம் மட்டுமே கைக்கு வந்து சேர்ந்தது என்பதை பாக்தாத்தில் உள்ள ஐ. நா. வட்டாரங்கள் ஒப்புக் கொண்டன.

ஈராக் கொடுக்கும் 'ஓடர்'களுக்கு ஐ. நா. ஒப்புதல் கொடுத்த போதும், அதை அமெரிக்கா நிறுத்தி வருவதாக ஈராக் குற்றஞ்சாட்டி வருகிறது. (இ-3)

## தடையை அகற்ற தலிபானுக்கு கோரிக்கை

மத்திய ஆப்கானிஸ்தான் மீதான தடையை அகற்றி விடுமாறு ஐ. நா. உலக உணவுத் திட்டத்தின் தலைவர் தலிபான் அமைப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த தடை உத்தரவினால் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் 10 ஆயிரத்துக்கும் அதிகமானமக்கள்வறுமையை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


**உடன் விற்பனை**

பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 29 - 11 - 97 சனிக்கிழமை பிறிமா பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (51383)

**தவறிவிட்டது**

செல்வி விஜயகலாஜெ॰திசன் என்பவரது 705462615V இலக்க தேசிய அடையாள அட்டை, 0906023871இலக்க விசேட அடையாள அட்டை என்பன சுன்னாகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ''ரஞ்சனாஸ்'' புடவையகம், சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (51378)

**வின**. **த்தாள்**

3 ஆம் தவணைக்கான மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் ஆண்டு 3 முதல் ஆண்டு 10வரையான வகுப்புகளுக்கு கிடைக்கும். புதிய நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [51372]


## தமிழ்த்துறை ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குமுமாரசுமத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''ஈழத்தமிழர் நாட்டார் வழக்காறுகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்'' என்னும் தலைப்பில் தமிழ்த்துறை விரிவுரையாளர் கி. விசாகரூபன் ஆய்வுரையாற்றுவார். (ஐ)

## உதவிப்பணம்

கொழும்புத்துறை, நவ. 25

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்குரிய ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் அவ்வப் பகுதி தபாலகங்கள், உபதபாலகங்கள் ஊடாகத் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (இ-30)

## யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 25

பொதுச் சுகாதாரப்பரிசோதர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார். (இ)

## சைவப்புலவர் பரீட்சை பெறுபேறு

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட சைவப் புலவர் பட்டப்பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியிடப்பட்டன.

இளம் சைவப்புலவர் தேர்வில் இ. நித்தியானந்தன், க. மணிமாறன் சி. பாலமுரளி, ஆகியோர் இரண்டாம் பிரிவிலும் து. அருந்தவசீலன், சி. தவமலர் ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்திபெற்றுள்ளனர்.

சைவப்புலவர் தேர்வில் சி. நவரத்தினம், கா. கமலநாதன், மு. முரளிதரன், ச. சத்தியதாசன் ஆகியோர் இரண்டாம் பிரிவில் சித்தி பெற்றுள்ளனர். (ஐ-ரீ)

# சங்கங்களில் மண்எண்ணெய் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்!

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளைகளூடாக வழங்கப்படும் மண்எண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் சீ. வீ. கே சிவஞானம் தெரிவித்தார்.

ஒரு வாரகாலமாக சங்கத்தின் கிளைகள் மூலம் மண்எண்ணெய் கட்டுப்பாடின்றி தாராளமாக மக்களுக்குவழங்கப்பட்டது.

ஆனால் மண்எண்ணெயின் கையிருப்பு சங்கத்தில் முடிவடையும் தறுவாயில் இருப்பதாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் குறித்த அளவு தொகை மண்எண்ணெயே சங்கத்துக்கு வழங்கி வருவதாலும் மண்எண்ணெய் விநியோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சங்கத்தின் கிளைகள் மூலம் முதல் கட்டமாக பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஆறு லீற்றர் மண்எண்ணெய் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் சிவஞானம் தெரிவித்தார். (இ- 17)


## இளைப்பாறிய அதிபர்களின் பாராட்டு விழா

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் நற்பணியாற்றி இளைப்பாறிய

★ திரு. சி. செல்வநாயகம் (அதிபர், யா/தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி, தெல்லிப்பழை)

★ திரு. ஐ. மார்க்கண்டன் (அதிபர், யா/அளவெட்டி தெற்கு றோ. க. வித்தியாசாலை)

★ திரு. ச. நாகலிங்கம் (அதிபர், யா/அளவெட்டி தெற்கு அ. மி. த. க. பாடசாலை)

★ திரு. வை. கணேசமூர்த்தி (அதிபர், யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்)

ஆகியோரின் பிரியாவிடையும், சேவைநலம் பாராட்டு விழாவும் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அதிபர்களால்

இன்று (25 – 11 – 97) செவ்வாய்க்கிழமை பி. ப. 1.00 மணிக்கு (இலங்கைநேரம்) யா/யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படவிருக்கிறது.

எனவே அவர்களது நற்பணியை தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பணிப்பாளரும், அதிபர்களும் வாழ்த்துவதுடன் அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கல்விப்பணிப்பாளர், அதிபர்கள்,
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்,
தெல்லிப்பழை.
(51358)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நவமணி தம்பாபிள்ளை**
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

மண்ணக மலர்வு: 17 - 05 - 1930
விண்ணக மறைவு; 30 - 11 - 1994

திதி; 25 - 11 - 1997

அன்பால், பண்பால், அறிவால்
எம்மை வழி நடத்திய அம்மாவே!
ஆண்டு மூன்று சென்றிடினும்
எங்கள் நெஞ்சங்கள் ஆறாது.

உங்கள் நினைவில் வாழும்:
கணவன், பிள்ளைகள், மருமகள்.

''நவமகால்''
கல்வளை,
சண்டிலிப்பாய்.
(51305)


# மனநோயாளருக்கு விளையாட்டுக் கருவி

திருநெல்வேலி. நவ. 25

மானிப்பாயில்இயங்கிவரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையிலுள்ள மன நோயாளர்களின் நலன் கருதி அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் அங்குள்ள உள நலச்சங்கத்திற்கு 15ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள விளையாட்டு உபகரணங்களையும், ஏனைய பொருள்களையும் அன்பளிப்பு செய்துள்ளது.

கஸட் ரேடியோ, பெரிய கார் பற்றறி, கரம்போட் கைப்பந்து வலை ஆகிய பொருள்கள் அண்மையில் உள நலச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அகதிகள் புனர் வாழ்வு நிறுவன உப தலைவர் அ. நல்லதம்பி தெரிவித்தார்.

கடந்த கால இடம்பெயர்வின் போது உளநலச் சங்கத்துக்குச் சொந்தமான — மன நோயாளர்களால் பயன்படுத்தப்பட்டுவந்த — விளையாட்டு உபகரணங்களும்மற்றும் பொருள்களும் காணாமற்போய் விட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

# கால்நடைகளை கட்டிவளர்க்க வடமராட்சி கிழக்கில் கோரிக்கை

கால் நடைகளை கட்டி வளர்க்குமாறும்—

நெல்வயல்கள் உள்ள இடங்களுக்கு அருகில் உள்ள வீதிகள, வரம்புகள், நெற்செய்கை மேற்கொள்ளப்படாத வயல்கள் ஆகியவற்றில் கால் நடைகளை கட்ட வேண்டாம் என்றும்— வடமராட்சி கிழக்கு கமக்கார அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

கட்டாக்காலியாக அலையும் கால்நடைகள் பிடிக்கப்படும் என்றும்—

கமநலசேவை நிலையத்தின் விதிகளின்பிரகாரம்கால்நடை உரிமையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-36)

## வடமராட்சி கிழக்குப் பகுதிகளில்

# கடற்றொழில் உபகரணங்கள் அடிக்கடி திருடப்படுகின்றன

வடமராட்சி கிழக்கில் மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

கடற்றொழிலாளர்களின் உபகரணங்களே அதிகளவில் திருட்டுப் போகின்றன.

கடந்த வாரம் செம்பியன் பற்று தனிப்பனை என்னும் இடத்தில் களவாடப்பட்ட உபகரணங்கள் செம்பியன் பற்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரால் மீட்கப்பட்டு உரிய மீனவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

இத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் எச்சரிக்கை செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-36)

# நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் போஷாக்கு இன்றிப் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு மாமுனையில் இயங்கி வந்த சிறுவர் போசாக்கு பூங்கா மூடப்பட்டதால் 114 சிறுவர்கள் போசாக்கு இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பூங்கா இயங்கிய காலத்தில் மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்பு, மாளியவளை பகுதி சிறுவர்கள் அங்கு போசாக்கு உணவு பெற்றதுடன் அவர்களுக்கு கல்வி போதனையும் வழங்கப்பட்டு பகல் முழுவதும் பராமரிக்கப்பட்டு வந்தனர். (ஐ-36)

# 7 வருடங்களுக்குமுன் புதைத்த தங்கநகை மீண்டும் கிடைத்தது

## மயிலிட்டிப் பகுதியில் சம்பவம்

1990ஆம் ஆண்டு தமது வீட்டு வளவில் தங்கநகைகளைப் புதைத்து வைத்த ஒருவர் படையினரின் அனுமதியுடன் மீண்டும் அதனைத் தோண்டி எடுத்த மற்றொரு சம்பவம் மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக 51 ஆவது படையணியின் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

1990 ஆம் ஆண்டில் காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவம் நடவடிக்கையை ஆரம்பித்தபோது காங்கேசன் துறைப் பகுதியிலுள்ள மயிலிட்டி வடக்கில் வசித்த ஒருவர் தமது தங்கநகைகளை தமது வீட்டுக்கருகில் புதைத்து வைத்துவிட்டுச் சென்றிருந்தார்.

அவர் தற்பொழுது இமயாணன் பகுதியில் வசித்து வருகிறார்.

இவ்வாறு மற்றும் ஒருவரால் புதைக்கப்பட்ட தங்க நகைகள் மீளப்பெறப்பட்ட செய்தியை 14-10-97 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் கண்ணுற்ற அவர் தமது கோரிக்கையை 51ஆவது படையணித் தளபதிக்குச் சமர்ப்பித்தார்.

படையணித் தளபதி நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பொருள்களை மீட்டெடுக்க வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அதற்கமைய அந்நபர் 10-11-97 இல் தமது காணியைத் தோண்டி சுமார் 50 பவுண் தங்கநகை மீட்டெடுத்துள்ளார்.

இதேபோன்று ஏற்கனவே ஐவர் தமது காணிகளில் புதைத்து வைத்திருந்த தங்க நகைகளை மீட்டெடுக்கப் பாதுகாப்புப் படையினர் வசதிகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மதுவரி உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சை

மதுவரி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானோர் சமுகமளித்திருந்தனர் என யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாகனங்களுக்கு காப்புறுதி பெற வேண்டுமென அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 25

''குடா நாட்டில் உள்ள சகல வாகனங்களுக்கும் எதிர் வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் காப்புறுதி பெறப் பட வேண்டும்.''

இப்படி யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

அதற்குள் காப்புறுதி பெறாத வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இடைநிலை மருத்துவ சேவை கடிதங்கள் தனிச் சிங்களத்தில்

யாழ்ப்பாணம், நவ. 25

சுகாதாரத் திணைக்களத்தின் இடைநிலை மருத்துவ சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இடைநிலை மருத்துவ சேவைக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பிலும், பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த மாதம் 22 ஆம், 27 ஆம் திகதிகளிலும் நடைபெற்றன.

இந்த நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்தே கொழும்பிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை — குறிப்பிட்ட திகதியில் கொழும்பில் சமுகமளிக்க வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தபோதும், கடிதம் உரியவர்களுக்கு குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரேயேகிடைத்ததாலும், கொழும்பு செல்வதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவும் இடைநிலை மருத்துவ சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். (இ-5)

## மலேரியாவால் குழந்தைமரணம்

மூளை மலேரியா காய்ச்சலுக்கு ஒன்றரை வயது குழந்தை ஒன்று பலியானது. சாவகச்சேரி கச்சாய்வீதியை சேர்ந்த மரியஅன்ரனி மரிய லோரன்ஸ் என்னும் குழந்தையே பலியானது. (ஐ-174

மாவின் விலைப் பிரச்சினை;

# பேக்கரி உரிமையாளர்கள் சத்தியாக்கிரக அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 25

பாண் உற்பத்திக்கு தேவையான மாவை குறைந்த விலையில் வழங்க யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மாத இறுதிக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்வரும் முதலாம் திகதி முதல் பாண் உற்பத்தியை நிறுத்தி சங்க அலுவலகம் முன்பாக சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப் போவதாக பேக்கரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நடந்த சங்கத்தின் கூட்டத்தில் தமது பிரச்சினையை எடுத்து விளக்கியதாகவும் —

தமது பிரச்சினைக்குத்தீர்வு காணாத பட்சத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பாண் உற்பத்தியை நிறுத்தி சங்க அலுவலகத்துக்கு முன் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாகவும்—பேக்கரி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பள உயர்வு, விறகு விலை அதிகரிப்பு உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகளால் குறிப்பிட்ட விலைக்கு பாணை விற்க முடியாதிருப்பதாகவும்— மாவின் விலையைக் குறைத்து வழங்கினால் பாணை குறிப்பிட்ட விலைக்கு விற்க முடியும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

பொலன்னறுவையில் தாக்குதல்

# ஊர்காவற்படையினர் இருவர் காணாமற் போய்விட்டனர்

பொலன்னறுவை மாவட்டம், திம்புலாகலவில் சனி இரவு விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு ஊர்காவற்படையினர் காணாமற் போய்விட்டனர்.

அதேசமயம் வெல்லாவெளி விளாந்தோட்டத்தில் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-21)

## குமுதினியில் திருத்த வேலைகள்

நெடுந்தீவு, நவ. 25

நெடுந்தீவுக்கான அரச மோட்டார்படகு குமுதினியின் திருத்த வேலைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

குமுதினி அனேகமாக அடுத்த மாதம் பிற்பகுதியில் சேவைக்கு விடப்படலாம் எனத் தெரியவருகிறது. (இ-1)

## சமுர்த்தி நியமனம் இல்லை

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சமுர்த்தி நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.

ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளில் சமுர்த்தி நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் மருதங்கேணி பிரிவில் மட்டும் சமுர்த்தி நியமனம் வழப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-36)

# ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவருக்கு கணித பாட உதவிக் குறிப்புகள்

அடுத்த மாதம் ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவரின் நலன் கருதி கணித பாட உதவிக் குறிப்புகள் என்ற தலைப்பிலான இவ் விளக்கக் கட்டுரையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் வெளியானது. அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

**வரைபுகள்:** அட்டவணையில் விடப்பட்ட பெறுமதிகளை பெறும் முறையினை செய்கையில் தெளிவாகக் காட்ட வேண்டும். விரைவில் கொடுக்கப்பட்ட அளவுத்திட்டத்திற்கமைய வே X- அச்சு, Y- அச்சு என்பவற்றை வரைந்து வரைபினை வரைதல் வேண்டும். புள்ளிகளை வரைபுத்தாளில் குறிக்கும் பொழுது அவை நன்கு விளங்கும் பொருட்டு புள்ளிகளைச் சுற்றி சிறிய வட்டங்களை வரைதல் நன்று. புள்ளிகளை இணைக்கும் பொழுது வளை கோடுகளால் (நேர் கோடுகளினால் அன்று) இணைக்க வேண்டும். அவ்வாறு வரையின் பொருத்தமான வரைபினைப் பெறமுடியும். வரையப்பட்ட வரைபினைப் பயன்படுத்தியே வரைபு தொடர்பான வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும்.

தரப்பட்ட இருபடிச் சமன்பாட்டுக்குத் தீர்வு காணும் போது $x^2$ இனை நீக்கி பொருத்தமான நேர்கோட்டினை வரைந்து விடையைப் பெறலாம், அச்சுக்கள், புள்ளிகள், கோடுகள் என்பன தெளிவாகவும் துப்புரவாகவும் அமைதல் வேண்டும். பெரும்பலான வரைபுகள் சமச்சீர்த்தன்மை கொண்டனவாகவே அமையும்.

**தொடைகள்:** தொடைகள் தொடர்பான குறியீடுகள் யாவற்றையும் அவை பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். தொடைகள் தொடர்பான தரவுகள் குறிக்கப்படும் பொழுது அகிலத் தொடை செவ்வக வடிவில் குறிப்பிடல் அவசியம். பிரச்சினைகளை விடுவிக்கும் பொழுது எண்களை அடிக்கடி எழுதி வெட்டாது பென்சிலால் எழுதி இறுதியில் பேனாவினைப் பயன்படுத்தல்நன்று, கேள்விக்கு அமையவே வென்வரிப்படங்களை நிறந்தீட்டிக் காட்ட வேண்டும். வினாக்களை நன்குவிளங்கி ஒன்றுக்கு மேற்பட்ட வென்வரிப்படங்களை வரைந்தேனும் இறுதி விடையினை ஒரு படத்தில் தெளிவாகக் காட்டலாம்.

**புள்ளிவிவரவியல்:** தரப்பட்ட எண் கூட்டங்களின் ஆகாரம், இடை, இடையம் என்பவற்றின் பொருள் அறிந்து கணித்திடும் முறையினை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். திரள் மீடிறன் அட்டவணை மூலம் இடையப் பெறுமதியைக் கணிக்கலாம் வகுப்பாயிடைகளை நிலைக்குத்தாக எழுதி பொருத்தமான உத்தேச இடையினைத் தெரிந்து இடையினைக் கணித்தல்வேண்டும். திசை கொண்ட எண்களைப் பயன்படுத்தி மொத்த விலகல் என்பவற்றை பிழையின்றித் திருத்தமாகக் கணிக்கலாம்.

**அமைப்புக்கள்:** தரப்பட்ட வினாவிற்கு வரையப்பட வேண்டிய உருவினை பருமட்டமாக வரைந்து தரவுகளை அவ்வுருவில் குறிக்க வேண்டும். வரையும் ஒழுங்கினை நன்கு அறிந்து கொண்டு அவ்வொழுங்கு முறையில் வரைந்து உரிய படத்தினை நிறைவு செய்ய வேண்டும். கோடுகள், விற்கள், வட்டங்கள் யாவும் தெளிவாக வரையப்பட வேண்டும். வரையப்பட்ட கோடுகள், விற்கள் என்பன அழிக்காது விடல் வேண்டும். வட்டம் வரையும் பொழுது அவ்வட்டத்தின் மையத்தினையும் ஆரையையும் பெற்ற வழிமுறைகள் யாவும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

**திரிகோண கணிதம்:** வினாவில் பருமட்டான உருவம் தரப்படின் அதனைப் போன்ற ஓர் உருவத்தை விடைத்தாளில் வரைந்து தரவுகளை அவ்வுருவில் குறிக்க வேண்டும். வினாவில் உருவம் கொடுக்கப்படாவிடத்து பருமட்டான உருவம் வரைந்து விடை காண வேண்டும். முப்பரிமாணங்களைக் கொண்ட வினா தரப்படின் ஒன்றிற்கு மேற்பட்ட உருவங்களை வரைந்து வினாக்களுக்கு விடை அளிக்கலாம். விடை காண்பதற்கு மிகப் பொருத்

பொ.ச. ஞானசீலன்

தமான திரிகோண கணித விகித சமன்பாடுகளை அமைத்து மடக்கை வாய்பாடுகளின் உதவியுடன் இலகுவாக விடைகளைப் பெற முடியும். இதனால் நேர விரயத்தை தவிர்க்க முடியும். குறிப்பிட்ட நேரத்திற்குள் விடையினைப் பெற முடியாவிடத்து விடைகளை கோவை வடிவத்தில் கொடுக்க வேண்டும். வாய்ப்பாடுகளை பார்த்து எழுதும் பொழுது தவறு ஏற்படா வண்ணம் பார்த்தல் நன்று. சுருக்க முறைகளை முடியுமெனில் கையாளலாம்.

**நிகழ்தகவு:**

வரிசைப்பட்ட சோடிகளை எழுதி, தெக்காட்டுத்தளத்தில் குறிப்பதன் மூலம் கேட்கப்பட்ட நிபந்தனைக்கு அமைய நிகழ்தகவினைக் கணிக்க முடியும். மரவரிப் படங்களை வரைந்து குறித்த நிபந்தனைக்கமைய நிகழ்தகவினைப் பெறமுடியும் மரவரிப்படத்தின் கிளைகளில் நிகழ்வுக்கான பின்னங்கள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும். இறுதி நிகழ்தகவினைப் பெருக்குவதனாலோ கூட்டுவதனாலோ பெறமுடியும். இவை பற்றிய விவரம் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

**கேத்திர கணிதம்:**

நிறுவப்பட வேண்டிய தேற்றங்கள் யாவும் முறைப்படி உருவம், தரவு, மேற்கோள் அமைப்பு [இருப்பின்] நிறுவல் என்ற ஒழுங்கின் பிரகாரம் நிறுவும் முறையினை நன்கு எழுதிப்பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். தேற்றங்களை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி வினாக்களை பருமட்டான உருவம் வரைந்து தேற்ற உண்மைகளைப் பயன்படுத்தி நிறுவவேண்டும். கேத்திர கணித கூற்றுக்களும் அவற்றிற்கான காரணங்களும் தெளிவாக சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும். இயன்றவரை கேத்திரகணித குறியீடுகளை பயன்படுத்தி நீண்ட தொடர் வசனங்களைத் தவிர்க்கமுடியும்.

**எண்கணிதம்:**

I) மெற்றிக் வாய்ப்பாடுகள்: நீட்டலளவை, நிறுத்தலளவை பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். ஓர் அலகில் இருந்து இன்னோர் அலகிற்கு விரைவாகவும் திருத்தமாகவும் மாற்றலில் பயிற்சி பெற வேண்டு.

II) பரப்பளவு: முக்கோணம், சரிவகம், இணைகரம், செவ்வகம், வட்டம், உருளை என்பனவற்றின் பரப்பளவுகளைக் கணிக்கும் முறையினையும் பொருத்தமான வாய்ப்பாடுகளையும் அறிந்திருத்தல் அவசியம்.

III) கனவளவு: திண்மப் பொருள்களின் கனவளவுகளை அறிதற்கான வாய்ப்பாடுகளை அறிதல் வேண்டும். கோளம், கூம்பு, உருளை போன்றவற்றினதும் வேறு சமச்சீர் உருவங்களுக்கும் கனவளவு காண்பதற்கான வாய்ப்பாடுகளை மாணவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

IV) நூற்று வீதம்: இலாப நட்ட நூற்று வீதங்களை கொள்விலையின் அடிப்படையில் கணித்தலில் பயிற்சி பெறல் வேண்டும். எளிய வட்டி தொடர்வட்டி (கூட்டு வட்டி) என்பனவற்றை வாய்பாடுகளைப் பயன்படுத்தியும் வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தாது முறைப்படி கணிக்கவும் அறிந்திருக்க வேண்டும்.

V) பங்கும் சரக்குமுதலும்; நூற்று வீதத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானம் கணித்தல், பங்குகளை விற்றல் வாங்கல் என்பனபற்றி தெளிவாக விளங்கி பிரச்சினைகள விடுவிக்க வேண்டும்.

VI) காப்புறுதி: வாடகைக் கொள்வனவும் என்பனவும் நூற்று வீதத்தின் அடிப்படையில்எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்,

VII) சமூகக்கணிதம்:வாழ்க்கையோடு தொடர்புடை பிரச்சினைகளை விளங்கி அவற்றினை விடுவிற்பதற்கான வழி வகைகளை நூற்று வீதம், பரப்பு, கனவளவு என்பனவற்றினடிப்படையில் விடுவித்தலில் பயிற்சி பெற வேண்டும்.

எண்கணிதம் தொடர்பான பிரச்சினைகளை விடுவிக்கும் போது பின்னங்களைச் சுருக்க நீண்ட முறைகளைக் கையாளாது, மடக்கை வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி நேரத்தை சுருக்கிக் கொள்ள முடியும். எண் கணிதப் பிரச்சினைக் கணக்குகளை விடுவிக்கும்போது பொருத்தமான அட்சரகணித சமன்பாடுகளை அமைத்து விடைகளை இலகுவாகவும் விரைவாகவும் பெறமுடியும்,

**பொதுக்குறிப்பு:** அட்சர கணித வாய்ப்பாடுகளையோ, கேத்திர கணித உண்மைகளையோ விளக்கமின்றி வெறுமனே மனப்பாடம் செய்யாது வாய்ப்பாடுகளை பெறும் முறையினையும் கேத்திரகணித கோட்பாடுகளையும் நன்கு விளங்கி மனதிற் பதித்து கொள்ள வேண்டும்.

பரீட்சையில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அம்சங்களான (1) விரைவு (2) திருத்தம் (3) துப்புரவு என்பன கணிதபாடம் சம்பந்தமாகவும் சாலப் பொருந்தும்.

★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர் 'ராகிங்' செய்வதில்லை என முடிவு

## புதிய மாணவருக்கும் பெற்றோருக்கும் விசேட வேண்டுகோள்

யாழ்ப்பாணம் நவ. 25

புதிய மாணவர்களுக்கு உடலியல் உளவியல் ரீதியில் துன்பம் தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை,

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட சகல ஆண்டு தமிழ் மாணவர்களும் தாம் நடத்திய கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

அந்த முடிவினைத் தெரிவித்தும், புதிய மாணவர்கள் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தும், வேண்டுகோள் விடுத்தும் அறிக்கை ஒன்றை அவர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

''பகிடிவதையும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்களின் நிலைப்பாடும்'' என்ற தலைப்பிலான அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு;-

நாட்டில் தற்போது நிலவுகின்ற எத்தனையோ கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும், தங்களது கடின முயற்சியும், ஊக்கமும் காரணமாகவே பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ் மாணவர்கள் அனுமதி பெறுகின்றனர். இவ்வாறு அனுமதி பெற்று பல கனவுகளுடன் பல்கலைக்கழகங்களுக்குள் காலடி வைக்கும் போது பகிடிவதை என்ற கலாசாரத்தினால் அவர்கள் உடல், உளவியல் ரீதியாக மிகவும் பாதிப்புறுகின்றனர்.

பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கு முன்னர் பெற்றோர்களது அரவணைப்பில் இருந்தே வருகின்றனர். குடும்பப்பிரிவும், புதிய சூழ்நிலையுமே அவர்களை அச்சுறுத்தப் போதுமானதாய் இருக்க, இந்தப் பகிடிவதை அவர்களை மேலும் துன்பத்திற்கு இட்டுச் செல்லக் கூடாது.

புதிய மாணவர்கள் தங்கள் சிரேஷ்ட மாணவர்களை அறிந்து நட்புக் கொள்ளவும், புதிய பல்கலைச்சூழலை புரிந்து நடக்கவுமே, இந்தப் பகிடிவதை என்ற மரபு நடைமுறையில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. ஆனால், பெரும்பாலும் இந்த நோக்கத்தை மறந்து வெறுமனே ஒரு மரபு என்ற ரீதியிலே பகிடிவதை பின்பற்றப்பட்டு வருவது துரதிர்ஷ்டமானது.

சில சந்தர்ப்பங்களில் உடல் உளவியல் ரீதியில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் வண்ணம் அவற்றின் பாரதூரமான விளைவுகளைச் சிந்திக்காது அல்லது உணராது பகிடிவதை செய்யப்படுவது மிகவும் வேதனைக்குரியது. இத்தகைய பகிடிவதை எவ்வளவு தூரம் கொடுமையானது என்பதை, மாணவர் சமுதாயம் உணர்ந்து கொள்ள ''வரப்பிரகாஷ்'' என்ற இளைஞரின் உயிர் விலையாகக் கொடுக்கப்பட வேண்டியிருந்தது மிக மிக அதிகம். பல்கலைக்கழக மாணவர் சமுதாயத்தின் வரலாற்றில் மிக வேதனைக்குரிய, வெட்கப்பட வேண்டிய கறை படிந்த ஒரு செயலாக அமைந்து விட்டது.

### மரணம் உண்டாக்கிய விழிப்புணர்வு

பகிடிவதையினால் வைத்திய சிகிச்சை பெற வேண்டியிருந்த சந்தர்ப்பங்கள், உடல் ஊனமுற்ற சம்பவங்கள், தற்கொலை செய்து கொண்ட சந்தர்ப்பங்கள் நாட்டின் பல பல்கலைக்கழகங்களில் நடந்திருந்தும், அவை ஏற்படுத்தத் தவறியிருந்த விழிப்புணர்வை எமது சகோதரனின் மரணம் ஏற்படுத்திச் சென்றுள்ளது. வரப்பிரகாஷின் மரணத்திற்கான பொறுப்பைநேரடியானபகிடிவதையில் ஈடுபட்டவர்கள் மட்டுமல்ல, உடலியல்ரீதியிலானபகிடிவதையை தொடங்கியவர்கள் முதற்கொண்டு இங்கு கல்வி கற்று வெளியேறிய, கற்றுக்கொண்டிருக்கும் சகல மாணவர்களும்; பகிடிவதை மரபை வளர்த்தவர்கள், வளர்க்க உதவியவர்கள், அதைத் தடுக்க முடியாது வாழாதிருந்தவர்கள் என்ற அடிப்படையில் தமக்குரிய பங்கை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இப்படியொரு செயல் இனியும் எங்கள் மத்தியில் நடைபெறக் கூடாது, பொறியியற் பீட சகல ஆண்டு தமிழ் மாணவர்களும், புதிய மாணவர்களுக்கு உடலியல், உளவியல் ரீதியில், துன்பம் தரக் கூடிய எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை என மாணவர் கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானம் எடுத்துள்ளனர்.

### புதிய மாணவர்களே!

இனிவரும் ஆண்டுகளில் வரப்போகும் புதிய மாணவர்களே, மேற்கூறிய தீர்மானத்திற்கமைய உடல், உளவியல் ரீதியில் துன்பம் தரக்கூடிய எந்த விதமான செயல்களிலும். உங்களது சிரேஷ்ட மாணவர்கள் ஈடுபட மாட்டார்கள். இவற்றை மீறி சிரேஷ்ட மாணவர்கள் யாரேனும் நடக்க முற்பட்டால் அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டிய அவசியமே இல்லை. இதில் நீங்கள் உறுதியாக இருங்கள்! ஏனெனில் அனைத்து மாணவர்களும் உங்கள் பக்கமே. புதிய மாணவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கும் இடையே நட்பு ஆரோக்கியமானதாகவும், இனியதாகவுமே இருக்க வேண்டும்.

அதே வேளை புதிய மாணவ சகோதரர்களே! இன்று நீங்கள் பல்கலைக் கழகத்திற்கு வரு முன்னர் எத்தனை அச்ச உணர்வில் இருக்கின்றீர்கள்! என்பதை சிந்தித்துப் பாருங்கள்! நாளை நீங்கள்தான் சிரேஷ்ட மாணவர்களாக மாறுகின்றீர்கள். நாளை எங்கள் சகோதரர்களும் இதே உணர்வில்தான் இருப்பார்கள் என்பதை புரிந்து அவர்களுடன் மனிதாபிமான ரீதியில் பழகுங்கள்.

### பெற்றோர்களே!

இவ்வளவு காலமும் உங்களுடன் ஒன்றாக இருந்த பிள்ளைகளை புதியதொரு இடத்திற்கு கல்வி கற்க அனுப்பும் போது, ஏற்படும் பிரிவுத் துயரம் ஒருபுறம், உங்கள் பிள்ளைகள் கல்வி கற்கும் சூழலைப்பற்றிய கவலை மறுபுறம். எனவே ''உடலியல் உளவியல் ரீதியில் துன்பம் தரும் வகையில் சிரேஷ்ட மாணவர் யாரேனும் செயற்படின் அதற்குக் கீழ்ப்படிய வேண்டாம்'' என்று உங்கள் பிள்ளைகளுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுங்கள்.

அதேவேளை, நாளை உங்கள் பிள்ளைகள் சிரேஷ்ட மாணவர்களாகிய பின்னர் அவர்களை அடுத்து வருகின்ற புதிய மாணவர்களுடன் பண்பாகப் பழகுமாறு அறிவுறுத்துங்கள். ஏனெனில் தற்போது நீங்களும், உங்கள் பிள்ளைகளும் உள்ள மன உணர்விலேயே அடுத்து வரப் போகும் புதிய மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதைத் தவிர, உங்கள் பிள்ளை சிரேஷ்ட மாணவனாகிய பின்பு, சிறிய அளவில் கூட பகிடிவதையில் ஈடுபட்டு விரிவுரையாளர்களினால் இனங்காணப்படின் அது அவரின் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கும். அந்த வகையில் அது உங்களையும் உங்கள் குடும்ப நலனையும் பாதிக்கும் எனவே, பெற்றவர்களாகிய உங்கள் கைகளிலும் பெரும் பொறுப்பு உள்ளது.

வளமான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவது சமுதாயத்திலுள்ள அத்தனை பேரினதும் கடமையாகும். மாணவர்கள் அனைவரும் இச்சந்தர்ப்பத்தில் விழித்தெழ வேண்டும். பாடசாலை மட்டத்திலும் மாணவர்கள் மத்தியில் இத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வேண்டிக் கொள்கிறோம் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

### மாணவர்களின் கடிதம்

'மாணவர்களாகிய எம்மைப் பற்றிய தவறான எண்ணங்களை மக்கள் மத்தியில் போக்கவும், புதிய மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் உள்ள அச்ச உணர்வினைப் போக்கவும், எதிர்காலத்தில் சிறந்ததொரு பல்கலைக்கழகச் சூழலை ஏற்படுத்தவும் ''பகிடி வதையும் பேராதனைப் பல்கலைக் கழக பொறியியற்பீட தமிழ் மாணவர்களின் நிலைப்பாடும்'' என்ற தலைப்பிலமைந்த அறிக்கையை தங்களுடைய பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரித்து உதவுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இவ்வாறு கேட்டு குறிப்பிட்ட பீடத்தைச் சேர்ந்த சகல ஆண்டுகளையும் சேர்ந்த மொத்த 226 மாணவர்கள் தமது பெயர், பதிவிலக்கம், கையொப்பங்களுடன் இங்கே முழுமையாகப் பிரசுரமாகியுள்ள அறிக்கையையும் சேர்த்து பேராதனையிலிருந்து எமக்கு அனுப்பி உள்ளனர்.

இந்த அறிக்கையின் ஆங்கிலப் பிரதியும் கிடைத்துள்ளது.

— ஆசிரியர்

# பாடசாலையில் ஒழுக்கம் இருந்தால் பல்கலையிலும் அது தொடரும்

## சைவத்திருமுறை பரிசளிப்பு விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, நவ. 25

''பாடசாலைகளில் ஒழுக்கம் கட்டி எழுப்பப்பட்டால் தான் பல்கலைக்கழகங்களிலும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிலவும்.''

யாழ்ப்பாண பல்கலைக் கழக கல்வியியற்புல தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா உடுவில் கல்விக்கோட்டத்தினரால் இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பபிரிவு மண்டபத்தில், நடத்தப்பட்ட சைவத் திருமுறை — பரிசளிப்பு விழாவில் சிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் பரராசசேகர பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்ற பின்னர் பன்னிரு திருமுறைகளும், நாயன்மார்களுடைய திருவுருவப்படங்களும் மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டன.

உடுவில் கோட்ட கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் தலைமையில் விழா நடைபெற்றது.

கலாநிதி சபா ஜெயராசா மேலும் பேசுகையில் பண், பரதநாட்டியம், பக்தி இலக்கியம் என்ற மூன்று பெரும் செல்வங்களை திருமுறைகள் உள்ளடக்கி இருப்பதாக திருமுறைகள் தொடர்பான ஆராய்வாளர்கள் கூறுகின்றனர். ஆத்மீகத்திலும் கலைவழிகளிலும், இலக்கியத் துறையிலும் எமக்கு பெரும் செல்வத்தை திருமுறைகள் வழங்கியுள்ளன என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் ''நாயன்மார்களுடைய வரலாற்றை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். தாம் செய்யும் தொழிலை தெய்வமாக கருதியவர்கள் நாயன்மார்கள். அதனால் தான் அவர்களுக்கு இறையருள் கிடைத்தது. நாமும் செய்யும் தொழிலை இறைவன் பணியாக கொண்டால் எமக்கும் இறைவன் அருள் கிடைக்கும்.'

இளைஞர்களுக்கு சமய உண்மைகளை எடுத்துக் காட்டுவது அவசியம். பாடசாலைகளில் பாடத்திட்டத்தோடு, சமுதாயத்துக்கேற்ப எப்படி வாழ வேண்டும், சமய வாழ்வை திருமுறைகள் மூலம் எவ்வாறு கற்கலாம் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

தேவாரங்களினூடாக அடியார்களின் வாழ்க்கை முறை, அவர்கள் கூறும் கருத்துக்களை எடுத்துக் கூறவேண்டும்.

எமது சமய பாரம்பரியங்களைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் ஏற்றமுறையில் கதாப்பிரசங்கம், நாடகங்கள், திருமுறைகள், புராண படனம் போன்றவற்றில் போட்டிகள் நடத்தி கல்வி கோட்டத்தினர் இளைஞர்களை ஊக்குவிப்பது பாராட்டப்பட வேண்டியது என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது வாழ்த்துரையில் கிறிஸ்தவர்கள் விவிலியத்தை எவ்வாறு போற்றுகிறார்களோ அதே போல சைவர்கள் கோயில்களில் திருமுறைகளுக்கு இடமளிக்க வேண்டும். திருமுறைகள் எமது உயிருக்கு சமமானவை. திருச்சிற்றம்பலவனுடைய முத்திரை பொறிக்கப்பட்டவை. பிள்ளைகளுக்கு திருமுறை ஒழுங்குகளை நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றார்.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் மு. திருஞானசம்பந்த பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், பிரதிக்கல்விப்பணிப்பாளர் (சங்கானை) ஆ. வி. கணேசலிங்கம், சிவஸ்ரீ தா. ஹரிஹர சுப்பிரமணிய குருக்கள், ஆசிரியர் ஆறு. திருமுருகன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

திருமுறை மனனபோட்டி, கதாப்பிரசங்கம், புராண படனம், தொண்டு செய் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு [illegible] களும் [illegible] நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(இ-152)

# கூட்டுறவு ஊழியரின் சம்பள சுற்றறிக்கை வரவில்லை

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான புதிய சுற்றறிக்கை இன்னும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவில்லை.

வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுஇது சம்பந்தமாக அசமந்தப் போக்கைக் கடைப் பிடிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுற்றறிக்கை கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் கொழும்பில் உள்ள கூட்டுறவு ஆணைக்குழுவின் செயலாளரினால் வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டும்இதுவரை அது யாழ். வந்து சேரவில்லை என்றுகூறப்படுகிறது.(இ-17)

# விமானப் பயணிகள் கவனத்துக்கு

விமான மூலம் கொழும்பு செல்லும் பயணிகள் காலை எட்டுமணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வரவேண்டும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பெரும்பாலான பயணிகள் காலதாமதமாகவே சமுகமளிப்பதால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# மற்றொரு மதகு திருத்தப்படுகிறது

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் வீதியில் கோப்பாய் வடக்கிலுள்ள மற்றொரு மதகை திருத்தும் பணி ஆரம்பமாகியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இம் மதகு திருத்தி புதிதாக அமைக்கப்பட்டு வருவதனால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய அருகில் தற்காலிக பாதை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எப்போதுமே மாறாதா?

நோயாளியான தந்தையை கொழும்பு அரசினர் தேசிய வைத்தியசாலையில் வைத்துப் பராமரிப்பதற்காகச் சென்ற பன்னிரண்டே வயதான தமிழ்ச் சிறுவனுக்கு ஏற்பட்ட கதி கல் நெஞ்சரையும் கண் கலங்க வைப்பதாகும்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலீஸார், உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு அடாவடித்தனமாக நடந்திருக்க மாட்டார்கள் என்று சொல்லலாம்.

தந்தையின் நோய்க்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்ய முடியாத நிலையில், வழமையான ஒழுங்கின் பிரகாரம் அவர் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். அவருக்கு உதவியாகவே மகனும் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்க நேர்ந்தது-

தந்தைக்குக் கூடத் தெரிவிக்காமல் பொலீஸார் மகனைக் கைது செய்து சென்றனர். பொலீஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டதில் 12 வயதுச் சிறுவன் படுகாயமுற்றார். மகனும் இப்போது கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்; நோயாளியாக்கப் பட்ட பின்னர்!

தெற்கில் குறிப்பாகக் கொழும்பில் தமிழர்கள் வயது வேறுபாடின்றி, காரணமின்றி, சந்தேகத்துக்கு உரியவர்கள் என்ற பெயரில், இரவிலும் பகலிலுமாக வகை தொகையின்றிக் கைது செய்யப்படுவது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இவ்வாறு கைது செய்யப்படுவோர் குறித்து அவர்களின் உறவினருக்கு அறிவிக்க வேண்டும்; கைதுக்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். கைது செய்தவர் தமது பெயரையும் பதவியையும் குறிப்பிட்டு கைதுசெய்தமை குறித்து(பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்வகுத்துள்ளதன் பிரகாரம்) ஒருபத்திரத்தை நெருங்கிய உறவினருக்கு வழங்க வேண்டும்; என்பது விதி.

இந்த உத்தரவைப் பொலிஸாருக்கு மட்டுமன்றி, முப்படைகளுக்கும் பிறப்பித்திருப்பவர், முப்படைகளினதும் பிரதம தளகர்த்தரான ஜனாதிபதி!

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு வசதியாக ஜனாதிபதி இந்த உத்தரவுகளைக் கடந்த ஜூலையில் விடுத்திருந்தார்.

ஆனால் அவை வெள்ளைக் காகிதத்தில் பதிக்கப்பட்ட கறுப்பு எழுத்துக்களாக உள்ளனவே அன்றி நடைமுறையில் இல்லை — ஏன் என்று கேட்பார் எவருமில்லை என்பது போல!!

இந்தக் கொடுமை ஒரு சிங்களச் சிறுவனுக்கு நடைபெற்றிருந்தால் தெற்கு எவ்வளவு கொந்தளிக்கும்? எதிரணி அரசியல்வாதிகள் இதனைப் பெரும் மனித உரிமை மீறல் பிரச்சினையாகப் பிரசாரப்படுத்தி லாபம் தேடமாட்டார்களா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உடன் நடவடிக்கை எடுக்குமாறு மேலிடங்களில் இருந்து உத்தரவுகள் வாயு வேகத்தில் பறந்திருக்க மாட்டாவா?

அவசரகாலச் சட்டம் உண்டு; பயங்கரவாதத் தடைச் சட்டம் உண்டு. இவை இரண்டினையும் போக்குக் காட்டித் தமிழர்களை எதுவும் செய்யலாம்; எவ்வித தண்டனையும் இல்லாமல் தப்பிவிடலாம்; பணமும் சம்பாதிக்கலாம் என்ற துணிவு பொலிஸாருக்கும், படையினருக்கும் அதிகம்!

தமிழர் தமிழர் தான்; சிங்களவர் சிங்களவர் தான்; முறையே இரண்டாந்தர பிரஜையும், முதலாம் தரப் பிரஜையும் தான்; என்ற நிலை எப்போதுமே மாறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் என்பன எல்லாம் வெறும் வார்த்தை மினுக்கங்களே அன்றி வேறென்ன?

மட்டக்களப்பு பகுதியில்

# அப்பாவிகளைப் பலவந்தப்படுத்தி படையினர் முகாம் துப்புரவு வேலை

## ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் முறையீடு

கொழும்பு, நவ. 25

மட்டக்களப்பு மாவட்டம் கிரான்குளம் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் நேற்று பொதுமக்களைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று தமது முகாம் வேலைகளில் ஈடுபடுத்தியதாக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிரான்குளம் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் நேற்று (திங்கள்)காலை 7.00 மணி அளவில் கிரான்குளத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்றனர்.

18 வயதுக்கும் 50 வயதுக்கும் உட்பட்டவர்களை மண்வெட்டி மற்றும் விவசாயக் கருவிகளுடன் வரும்படி கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றனர்.

கிரான்குளத்துக்கு அருகில் உள்ள குருக்கள்மடத்தில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் பகுதியில் பற்றைகளை துப்புரவு செய்யும் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

அத்துடன் அதிரடிப்படையினரின் முகாமை மீள அமைக்கும் பணியிலும் அவர்கள் ஈடுபடுத்தவைக்கப்பட்டனர்.

இத்தகைய சம்பவங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பகுதிகளில் — குறிப்பாக விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வழமையான சம்பவங்களாக மாறி வருகின்றன.

பொதுமக்கள் மட்டும் அல்ல, பாடசாலை மாணவர்களும் இவ்வாறு வலுக் கட்டாயமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் முன்னர் மண்டூர், போரைதீவு, தாளங்குடா ஆகிய இடங்களில் நடைபெற்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொதுமக்கள் — அரச ஊழியர், பள்ளி மாணவர் உட்பட —விசேட அதிரடிப்படையினரால் இத்தகைய வேலைகளில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் குறித்து நான் மேலிடத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து இத்தகைய சம்பவங்கள் சிறிது காலம் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது இத்தகைய மனிதத் தன்மையற்ற சம்பவங்கள் மீண்டும் நிகழ்கின்றன.

பொதுமக்கள் தாமாக விரும்பி சிரமதானம் செய்வது வேறு. ஆனால் துப்பாக்கி முனையில் அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவது மனிதத் தன்மையற்ற செயல் மட்டும் அல்ல, மக்களின் அடிப்படை உரிமைகளிலும் சுதந்திரத்திலும் தலையிடும் செயல் ஆகும்.

பொதுமக்களை கட்டாயப்படுத்தி வேலைகளுக்கு அழைத்துச் செல்வது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-21)

காணாமற் போனோர் விவகாரம்:

# விசாரணைக் குழு மீண்டும் டிசம்பர் 14 இல் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 25

குடாநாட்டில் கைதாகிக்காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு அடுத்த மாதம் 14 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

இம்முறை இக்குழுவினர் பலாலியில் நடத்தும் விசாரணை அனேகமாக இறுதி விசாரணையாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதுவரை இந்த விசாரணைக் குழுவின் முன் சாட்சியம் அளிக்காதவர்கள் தமது விவரங்களை யாழ். செயலகத்தில் பதிவு செய்வதன் மூலம் விசாரணையில் சமுகமளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

சோதனை முகாமைத் தாண்டி கொழும்பு வரும்

# வாகனத்தில் ஆயுதங்கள் இருப்பின் பொலீஸாரே அதற்குப் பொறுப்பு!

குருநகர், நவ. 25

மட்டக்களப்பு, நவ. 25

கிழக்கில் இருந்து தலைநகருக்கு வரும் வாகனங்கள் சோதனைத் தடை முகாம்களைத் தாண்டிய பின்னர் அவற்றில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த வாகனத்தைச் சோதனை செய்த பொலீஸாரே அதற்கு முழுப் பொறுப்பேற்கவேண்டும்.

இவ்வாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கில் இருந்து கொழும்புக்கு வரும் வாகனங்கள் தற்போது மூன்று இடங்களில் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு—கொழும்பு வீதியில் மன்னம்பிட்டியிலும்—

அம்பாறை — கொழும்பு வீதியில் சியம்பலாண்டுவ என்னும் இடத்திலும் —

கொழும்பு— திருமலை வீதியில் கித்துல்ஊட்டுவ என்னும் இடத்திலும் தற்போது சோதனைத்தடை முகாம்கள் அமைக்கப்பட்டு சகல வாகனங்களும் தீவிரமாகச் சோதனை செய்யப்படுகின்றன. சகல பொருள்களும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதிக்கப்படுகின்றன.

சோதனை செய்யப்படும் வாகனத்தின் இலக்கமும், அதனைச் சோதனை செய்த பொலீஸாரின் இலக்கமும் அங்கு பதிவு செய்யப்படுகின்றன.

(ஐ-21)

# நாவலர் பணிகளை இன்றும் தொடரவேண்டிய தேவை உண்டு

## குருபூசை விழாவில் வலியுறுத்து

நல்லூர், நவ. 25

சமுதாய வளர்ச்சிக்கு முற்று முழுதாக யார்தன்னை அர்ப்பணிக்கிறார்களோ, தியாகங்கள், பயனுள்ள பணிகள் செய்கிறார்களோ, அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். அந்த வகையில் சமயத்திற்கு மட்டுமன்றித் தமிழுக்கும் தொண்டாற்றிய நாவலர் போற்றப்பட வேண்டியவராவர். அவரை நினைவு கூர்வதும் அவரது தொண்டுகளைத் தொடர்வதும் தமிழர்களதும் சைவ சமயத்தவர்களதும் கடமை. இன்றைய காலகட்டத்தில் அவை மிகவும் அவசியமானவை.

இவ்வாறு ஆறுமுகநாவலர் குருபூசைத் தின விழாவில் பேசிய திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தெரிவித்தார்.

ஆறுமுகநாவலர் சபைத் தலைவர், சைவப்புலவர் ஆ. கந்தசாமி தலைமையில் நாவலர்மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நாவலர் குருபூசை நடைபெற்றது.

திருமதி சிற்றம்பலம் அங்கு தொடர்ந்தும் பேசும்போது கூறியதாவது:

நாவலரைக் குரவராக, நாவலர் பெருமானாகச்சைவ மக்கள் போற்ற வேண்டிய தேவை உண்டு. சைவம் நலிந்து கிறிஸ்தவம் ஆதிக்கம் பெற்ற காலத்தில் அவர் தோன்றினார். வறுமை காரணமாக மதமாற்றங்கள் இடம்பெற்றன. ஆலயங்களின் அருகாமையில் சிறுகுடில்களை அமைத்து மதமாற்ற நடவடிக்கைகளில் கிறிஸ்தவ பாதிரிமார் ஈடுபட்டிருந்தனர். நீண்ட பாரம்பரியங்களுக்கு எதிராக, சைவப்பாடசாலைகள் அற்ற நிலையில், மதமாற்றம் நிகழ்ந்து வந்தது.

தமிழ், ஆங்கிலம், வடமொழிகளில் சிறந்து விளங்கிய நாவலர், பாடசாலைகளை அமைத்து சைவப்பிள்ளைகளுக்கு சமய அறிவையும் தமிழ் அறிவையும் ஊட்டி மதமாற்றத்திற்கு எதிராகச் செயற்பட்டு வெற்றியும் கண்டார்.

நாவலர் பாடசாலையில் கற்பித்த நாவலர் அங்கும் தமது சமய, தமிழ்ப்பணிகளை ஆற்றியதுடன் அங்குள்ள மாணவர்களையும் மதமாற்றத்திற்கு உட்படாதவாறு பார்த்துக்கொண்டார். பீட்டர் பேர்சிவல் நாவலரின் இந்த நடவடிக்கைகளைத் தெரிந்து கொண்ட போதும் அவரது ஆற்றல், உறுதி திறமை என்பவற்றை நன்கு உணர்ந்தவராதலால் நாவலரின் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது என்று கூறினார்.

நாவலர் சபைத் தலைவர் திரு. கந்தசாமி தமது தலைமை உரையில் கூறியதாவது:-

சைவ சமயத்தை மட்டுமன்றி, ஒழுக்க நெறிகளுக்கமைய வாழவேண்டிய அவசியம் குறித்தும் நாவலர் நமக்குத் தெரிவித்துள்ளார். சைவசமயத்தை யாராலும் அழித்துவிடமுடியாது. இன்று பலர் கூட்டாகச் செய்யும் பணிகளை அன்று நாவலர் தனியொருவராகவே நின்று சாதித்தார். அவரது சாதனைகள், தொண்டுகள் என்பன இன்றைய சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டியவையாகும் — என்றார்.

குருபூசை, பண்ணிசை என்பனவும் நடைபெற்றன.

(அ-103)

## மண்முனையில் இருவர் கைது

மட்டக்களப்பு, நவ. 25

மட்டக்களப்பு பண்முனையில்ஓட்டோ ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த யுவதி ஒருவர் உட்பட இருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் ரீ-56 ரக ரவைகள் சிலவும், இராணுவச் சீருடைகளும் காணப்பட்டதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

(ஐ-21)

## இலவச சிகிச்சை முகாம்

தென்மராட்சி, நவ. 25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நாவற்குழி. தச்சன் தோப்பு, மறவன் புலோ, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கான இலசவ மருத்துவ சிகிச்சை முகாமினை டிசம்பர் முதல் திகதி எதிர்வரும் - ஞாயிற்றுக்கிழமை மறவன்புலோசகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

இச் சிகிச்சை முகாமில் கண், வாய்ப்புற்று, இரத்த அமுக்கம், நீரிழிவு ஆகிய பரிசோதனைகள் நடத்தவுள்ளதால் கலந்துகொள்ளவுள்ள இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது பிரிவுகிராம அலுவலரிடம் பதிவு செய்யுமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-117)

## மூன்றாம் தவணை பொதுப் பரீட்சை

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் ஆண்டு இறுதிப் பரீட்சை கோட்ட மட்டத்தில் பொதுப்பரீட்சையாக நடைபெறும்.

ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு கோட்ட மட்டத்தில் பொதுப்பரீட்சை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-11)

## நாளை

கார்த்திகை 11

புதன்கிழமை

திதி: துவாதசி

பின் இரவு 5.02 வரை.

நட்சத்திரம்: அத்தம்

காலை 6.32 வரை.

சுபநேரம்: 4 42 6 12

ராகுகாலம்: 12.12 1 42

(பகலுக்கும் இரவுக்கும் மறுமை தேவைப்படு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழில் தேசிய கீதம் பாடக் கூடாதா?

# ஐ. தே. க. எம். பியை விவாதத்துக்கு அழைக்கின்றார் சிவதாசன் எம். பி!

கொழும்பு, நவ. 25

தமிழ் இந்த நாட்டின் உத்தியோக மொழிகளில் ஒன்று. வானொலியிலும் ஏனைய பொது வைபவங்களிலும் தமிழில் தேசியகீதம் பாடவும் வகை உண்டு.

இது குறித்து பொதுசன ஊடகங்கள் மூலமாக வேனும், பொது மேடைகளிலேனும் விவாதிக்க வருமாறு திலக் கருணாரத்னவுக்கு நேற்று நாடாளுமன்றத்தில் வைத்துப் பகிரங்க சவால் விடுத்தார் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் கே. சிவதாசன்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை பிரதி சபாநாயகர் அனில் முனசிங்கா தலைமையில் கூடிய போது திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதம் நடைபெற்றது.

அந்த விவாதத்தில் கலந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பியான திலக் கருணாரத்ன பேசுகையில்—

இந்த நாட்டிற்கு ஒரு மொழி மட்டும்தான் உண்டு. இங்கு வாழும் 75 சத வீத மானோர் சிங்களவர்களே. அவர்களின் மொழி மட்டும் தான் உத்தியோக மொழியாக இருக்க முடியும். வானொலியில் இப்போது தமிழில் தேசிய கீதம் பாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழில்தேசிய கீதம் இருக்க முடியாது. உலகம் முழுவதிலும் தேசிய கீதம் ஒரு மொழியிலேயே இசைக்கப்படுகின்றது. இந்தியாவில் கூட ஹிந்தியில்தான் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது — என்றார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் கே. சிவதாசன் பேசுகையில் கூறியதாவது:

இப்போது இங்கே நடைபெறுவது திட்ட அமுலாக்கல் அமைச்சு மீதான விவாதம். இதற்குப் பொருத்தமற்ற விதத்தில், அப்பாற்பட்ட விதத்தில் உறுப்பினர் திலக் கருணாரத்ன மொழி குறித்துப்பேசினார்.

அவரது இந்தக் கருத்து, அவரது சொந்தக் கருத்தா அல்லது அவரது கட்சியின் கருத்தா? இனப் பிரச்சினை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். எதிர்க் கட்சித்தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார்.

13 ஆவது திருத்தத்தின் படி தமிழ் இந்த நாட்டின் அரச கரும மொழியாகும். இதனைக் கொண்டு வந்தவர் அப்போதைய ஐ. தே. க. தலைவர் ஜே. ஆர்.

மற்றொரு ஐ.தே.க.தலைவர் சிங்கள ஸ்ரீயை வாகனங்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்தார்.

ஆனால் திலக்கருணாரத்ன அவர்களுக்கு மாறானகொள்கையைக் கொண்டிருக்கின்றாரா?

இந்த விடயம் குறித்து இங்கு முழுமையாகப் பேசச் சந்தர்ப்பம் —நேரமில்லை.

ஆகையால் இது விடயத்தில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அவருக்கு நான் சவால் விடுகிறேன் என்றார். (அ)

# மட்டு. பாடசாலை அருகே வீழ்ந்து வெடித்த ஷெல்கள்!

### மாணவர்கள் மயிரிழையில் தப்பினர்

மட்டக்களப்பு, நவ. 25

மட்டக்களப்பு படுவான் கரை வவுணதீவுப் படை முகாமிலிருந்து நேற்று நண்பகல் ஏவி விடப்பட்ட ஷெல்கள் குறிஞ்சாமுனையிலுள்ள பாடசாலைக்கு அருகில் விழுந்து வெடித்தன.

அச்சமயம் பாடசாலையில் மாணவர்கள் ஆண்டிறுதிப் பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருந்ததாகவும் —

தெய்வாதீனமாக மயிரிழையில் மாணவர்கள் தப்பியதாகவும் —

மட்டக்களப்புத் தகவல் ஒன்று தெரிவித்தது. (உ)

# பாஸ்கரலிங்கத்தின் மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றது!

கொழும்பு, நவ. 25

தமது குடியியல் உரிமையை நீக்கும்படி சிபார்சு செய்து ஜனாதிபதி ஆணைக்குழு வழங்கிய உத்தரவை ரத்துச் செய்யும்படி கோரி திறைசேரி முன்னாள் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்களில் லஞ்சம், ஊழல் விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவே பாஸ்கரலிங்கம் உட்பட மூவரின் குடியியல் உரிமையை ரத்துச் செய்யும்படி சிபார்சு செய்திருந்தது.

மேற்படி மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம் விசாரணையை இன்று வரை ஒத்திவைத்தது. (உ-5)

### அழைப்புக் கடிதங்கள் தாமதம்

# மருத்துவ சேவையாளர்கள் கொழும்பு செல்லமுடியாத நிலை

சுகாதாரத் திணைக்களத்தின் இடைநிலை மருத்துவ சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் அவர்களது நியமனக் கடிதங்களைக் குறிப்பிட்ட திகதியில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கும் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும் அக்கடிதங்கள் தாமதமாகவே கிடைத்ததால் உரியவர்கள் நியமனக் கடிதங்களை கொழும்புக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியாமலிருந்தது—

இதனைத் தொடர்ந்தே நியமனக் கடிதங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை — எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இவர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பமாகி விட்டபோதும் கொழும்பு செல்வதில் உள்ள போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக இவர்கள் உரிய நேரத்தில் அங்கு செல்லமுடியாத நிலையில் உள்ளனர்.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்) (ஐ-5)

# உருளைக்கிழங்கு உற்பத்தியில் வடமராட்சியில் ஆர்வம் குறைவு

### 8 பெட்டி விதை உருளைக்கிழங்கே கொள்வனவு

வடமராட்சி, நவ. 25

வடமராட்சிப் பகுதியில் உருளைக் கிழங்குச் செய்கையில் இம்முறை விவசாயிகள் போதிய அக்கறை காட்டவில்லை.

கடந்த வருடம் வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியுடன் விதை உருளைக் கிழங்கு இலவசமாக வழங்கப்பட்டது.

பெருமளவு விவசாயிகள் உருளைக் கிழங்குச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி இருந்தார்கள்.

கடந்த வருடம் 80 பெட்டி விதை உருளைக்கிழங்கு வடமராட்சிப் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இம்முறை 8 பெட்டி விதை உருளைக்கிழங்கு மாத்திரமே வடமராட்சி விவசாயிகளால் பெறப்பட்டுள்ளது. [இ-173]

## லங்கா...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டுள்ளது.

பயணிகள் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளபோதும் எப்போது சேவை ஆரம்பிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. (ஐ-3)

## திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

விரைவில் இந்தப் படகு தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3)

## பண்பாட்டு அலுவலர்கள் நியமனம்

அச்சுவேலி, நவ. 25

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்கள் ஒவ்வொன்றிலும் பண்பாட்டு அலுவல்கள் ஒழுங்கமைப்பு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

வலயம் ஒன்றுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களில் இருந்து பண்பாட்டு அலுவல்கள் ஒழுங்கமைப்பு அதிகாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ஐ-11)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றது.

அதனால் இம்முறை 28 அடி உயரத்துக்கு நீர்மட்டம் ஏறியதும் குளத்து நீரை வான் பாய விடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நேற்று குளத்தில் நீர் மட்டம் 27 அடி 11 அங்குலமாக இருந்தது. வன்னியில் தொடர்ந்து நேற்றும் பெய்து கொண்டிருந்த மழையினால் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்தபடி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இரணைமடுக் குளம் இன்று அல்லது நாளை வான் பாய விடப்படும் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

குளம் வான் பாய விடப்பட்டால் இரணைமடுப்பாதை ஊடாக வன்னிப் பெருநிலப் பரப்பில் கிழக்கு — மேற்கு பிரதேசங்களுக்கு இடையில் இடம்பெறும் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதே சமயம் —

வன்னியின் கிழக்கு — மேற்குப் பகுதிகளுக்கு இடையில் பாதுகாப்பான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பதற்காக —

முறிகண்டியை அண்டிய பகுதியில் புதிய பாதை ஒன்றை விடுதலைப் புலிகள் வெட்டிக் கொண்டிருப்பதாகவும் —

அது விரைவில் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டு விடும் என்றும் —

மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-64)

## மட்டு: படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமது ஆள்களை இலகுவாக அடையாளம் காண்பதற்காகவும் தினமும் மாறுபட்ட கலர்ப் பட்டிகளை இராணுவத்தினர் கைகளில் கட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் மஞ்சள் பட்டியுடன் காணப்பட்ட இராணுவத்தினர் நேற்று ''றோஸ்'' நிறப்பட்டியுடன் காணப்பட்டனர்.

அதே நேரம் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான வாகரை, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி பிரதேசங்களில் மாவீரர் தினத்தை முன்னிட்டு பல்வேறு வைபவங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீதிகள், மாவீரர் துயில் இல்லங்கள் யாவும் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

இறுதி நாள் பிரதான வைபவம் கொக்கட்டிச்சோலையில் நடைபெறும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளார்கள். (உ-21)

உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புகளை
எந்நேரமும் யாழ்நகரில் பெறுவதற்கு
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு)
(சி/2160)

# வடக்கே பணிபுரிய பின்னடித்து டாக்டர்கள் பலர் தலைமறைவு

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றுவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட டாக்டர்களில் பலர் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் கடமையாற்றுவதற்கென நான்கு மாதங்களின் முன்னர் 169 டாக்டர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் பலரே தலைமறைவாகியுள்ளதாக ''லக்பிம'' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்களுக்குதங்குமிடவசதி போக்குவரத்து விமானச் சீட்டுக்கள், உணவு வசதி, மேலதிக சம்பளம், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான விசேட கொடுப்பனவு என்பன வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டிருந்தது, ஆனால் நியமிக்கப்பட்ட டாக்டர்களில் பலர் கடமையைப் பொறுப்பேற்காது தலைமறைவாகியுள்ளனர்.

பருத்தித்துறைப் பகுதியில் கடமையேற்றுள்ள டாக்டர்கள் தமக்கு அங்குபோதிய வசதிகள் அளிக்கப் படவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

சிறுகடைகளில் வடையும், ரொட்டியும், தோசையுமே சாப்பிடுகிறோம். தங்குவதற்கு விடுதிகள் இல்லை. யுத்தத்தால் சேதமடைந்த வீடுகளிலேயே தங்கினோம். அவற்றுக்குஜனனல், கதவுகள்கிடையாது. பெண் டாக்டர்கள் பிரசவ விடுதியிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு 'லக்பிம' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-164)

## பொலீஸ் சூட்டுக்கு இளைஞர் பலி!

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நேற்று மாலை பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் பலியானார்.

பலியான நபர் இ. மங்களராஜா (வயது 21)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர்கள் சிலர் கிரனேட்டுடன் அந்த இளைஞரைத் துரத்தி வந்தனர் என்றும் —

பாதுகாப்புத் தேடி அந்த இளைஞர் இருதயபுரம் பொலீஸ் நிலையத்தை நோக்கி ஓடியபோது அவர் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும் அச்சமயம் உஷார் அடைந்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் சூட்டுக்கு இலக்காகியே பிரஸ்தாப இளைஞர் பலியானதாக விசாரணை மூலம் தெரிவந்துள்ளது. (ஐ-21)

## காவலரண்கள் சேதம்

நீர்வேலிச் சந்தியில் இருந்த இரு இராணுவ காவல் அரண்களும், மாசிவன் வீதியிலுள்ள காவல் அரண் ஒன்றும் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டன.

இந்தக் காவலரண்களில் பகல் வேளையில் மட்டுமே படையினர் இருப்பது வழமை என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org